# 13

# தேவனுடைய மக்களுக்கு விசேஷ வார்த்தைகள்

வேதாகமத்தின் விளக்கத்தினுடைய அடிப்படையில் நீங்கள் எப்போதாவது பரலோகத்தைச் சித்தரிக்க முயற்சி செய்திருக்கின் றீர்களா? இது அநேகமாக நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் மாறுபட்டதாகவே இருக்கும். நமது பரலோக வீடானது நிச்சய மாகவே நாம் கற்பனை செய்வதைக் காட்டிலும் மகா மேன்மையான தாகவும், அதை விளக்குவதற்கு நாம் பயன்படுத்தும் பூமிக்குரிய அடையாளங்களான பொன், கண்ணாடி மற்றும் முத்து ஆகியவை களைக் காட்டிலும் அதிகமான மகிமையுடையதாகவுமே இருக்கும்.

தேவனுடைய செய்தியாளர்கள் விளக்கப்படுத்திய ஒரு "இராஜ்யம்" மற்றும் ஒரு "சபை" என்பதைச் சித்தரிக்க முயற்சி செய்பவர்களுக்கும் இதே விஷயம் உண்மையாகவே இருக்கின்றது. இந்தச் சொற்றொடர்களானது வேதவசனங்களில் அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு வார்த்தைகளைப் பற்றிய புரிந்து கொள்ளுதல் இல்லாமல், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை நாம் புரிந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கை அநேகமாக இருக்கவே முடியாது.

### "இராஜ்யம்" என்ற வார்த்தை

தேவனுடைய இராஜ்யமானது வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளிலும் ஒரு இராஜ்யமாகவே முன்னுரைக்கப்பட்டு,

வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டின் முற்பகுதியிலும் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டு (முன்னுரைக்கப்பட்டு), அப். 2லும் அதற்குப் பின்வரும் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிகளிலும் உண்மையில் இருப்பதாகவே முன் வைக்கப்படுகின்றது. இராஜ்யமானது தீர்க்கதரிசனத்தில் உருவகங்களாகவும், அடையாளங்களாகவும் சில சமயங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளதால், அதன் உண்மையில் இருக்கின்ற நிலையானது அதைப் பற்றி தீர்க்கதரிசிகளால் கொடுக்கப்பட்ட சித்தரிப்பைப் பார்க்கிலும் அதிக மகிமையுள்ளதாக இருக்கின்றது. தீர்க்கதரிசனத்தின் சித்தரிப்பு மிகவும் சரியானதாகவே இருந்தது, ஆனால் அதில் பயன்படுத்தப்பட்ட உருவக மொழிநடையினால் அது இரகசியத்தினால் மூடப்பட்டிருந்தது.

''இராஜ்யம்'' என்ற வார்த்தையானது புதிய ஏற்பாட்டிலும், பழைய ஏற்பாட்டிலும் கருத்தாழமுள்ளதாக இருக்கின்றது, ஆனாலும் அது புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் பற்றி நாம் விசேஷித்த ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றோம். தேவனுடைய இராஜ்யமானது பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாகவே புதிய ஏற்பாட்டில் முன்வைக்கப்படுகின்றது. வேதாகமத்தில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள விதம் பற்றி முழுமையான புரிந்து கொள்ளுதல் இல்லாமல் இருந்தால் ஒருவர் கிறிஸ்துவின் சபையைப் புரிந்து கொள்ள முடியாமல் இழப்படைவார் (பிற்சேர்க்கை 4ஐக் காணவும்).

இந்த வார்த்தையை நாம் மூன்று கோணங்களில் பரிசோதிப்போம், இந்த மூன்று கோணங்களுமே கிறிஸ்து நிலைநாட்டிய சபையில் இதன் பயன்பாட்டுடன் தொடர்புடையதாகும்.

## இதன் அரசியல் ரீதியான பயன்பாடு

"இராஜ்யம்" என்ற வார்த்தையானது வேதாகமத்தில் முதலாவதாக அரசியல் ரீதியான வகையில் பயன்படுத்தப்படுகின்றது, இது ஒரு அரசாளுகையை, அதில் ஒரே ஒரு மேலான, ராஜரிகம் செலுத்துகின்ற, வல்லமையுள்ள அதிகாரமுடையவர் ஆளுகை செய்வதைக் குறிக்கின்றது.

''இராஜ்யம்'' என்ற வார்த்தையின் அரசியல் ரீதியான பயன்பாடானது, இஸ்ரவேல் தேசத்துடன் யேகோவாவுக்கு உள்ள உறவு நிலை மூலமாகவும் விளக்கப்படுகின்றது. இஸ்ரவேலரின்

வரலாற்றில் முதலாவதாக, தேவனே அவர்களுடைய அரசராக இருந்தார். அவர்களுடைய அரசாங்கத்தில் அவரே சர்வ அதிகாரமும் பெற்ற தலைவராகவும், அவர்களது மார்க்கத்தின் தலைவராகவும் இருந்தார். இந்தக் காலத்தில் இஸ்ரவேலரின் அரசாங்கமானது தேவனால் ஆட்சி செய்யப்பட்ட தேவ அரசாக இருந்தது. எகிப்தியர்களைத் தேவன் செங்கடலில் அழித்ததை மோசேயும், இஸ்ரவேல் புத்திரர்களும் பார்த்த பொழுது, "கர்த்தர் சதாகாலங் களாகிய என்றென்றைக்கும் ராஜரிகம் பண்ணுவார்" (யாத். 15:18) என்று பாடினார்கள். சீனாய் மலையின் முன்பு இஸ்ரவேலர்கள் பாளையமிறங்கியிருந்த போது, அந்த இனத்தவருக்குக் கர்த்தரால், "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன் படிக்கையைக் கைகொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னு டையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் ..." (யாத். 19:5, 6அ) என்று கூறப்பட்டுள்ளது. யேகோவா, இஸ்ரவேலர்களுக்கு அவர்கள் வாழ வேண்டியதற்கான சட்டங்களை யும், எல்லா நீதிகளையும் மற்றும் மார்க்க ரீதியான செயல்பாடுகளை யும் தமது நாமத்தினாலேயே செயல்படுத்தும்படியாகக் கொடுத்தார். அவர், இஸ்ரவேலர்களை அவர்களின் யுத்தங்களில் வழி நடத்தி, அவர்களின் வெற்றிக்கான மதிப்பைப் பெற்றுக் கொண்டார் (எண். 21:34). அவரே இஸ்ரவேலரின் அரசராக இருந்தார், இஸ்ரவேல் நாடானது அவரது அதிகாரத்தின் கீழ் அவரது ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தது.

சாமுவேலின் நாட்களில், இஸ்ரவேல் நாடானது தன்னைச் சுற்றியுள்ள நாடுகள் போல் இருக்க வேண்டும் என்ற விருப்பத்தினால் உந்தப்பட்டு, பூமிக்குரிய ஒரு அரசரைத் தனக்குக் கொடுக்கும்படியாக தேவனிடத்தில் கேட்டது. தேவன், மக்களின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டு, சவுலை அவர்களின் முதலாவது (பூமிக்குரிய) அரசராகக் கொடுத்தார். அரசர் என்ற சொற்றொடர் மிகக் கண்டிப்பாகப் பயன்படுத்தப்படும் வகையிலான தனி அதிகாரம் பெற்ற ஒரு அரசராக இஸ்ரவேலின் அரசர் இருக்க முடியாதிருந்தது. அவர் யேகோவா விற்குப் பொறுப்புள்ள ஒரு உதவி அதிகாரியாகவும், ஒரு ஊழியக்கார ராகவும் மட்டுமே இருக்க வேண்டியதாயிற்று. அவருடைய அதிகாரம், மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் வரையறை செய்யப்பட வேண்டியதாய் இருந்தது. அவர் யேகோவாவிற்கு ஒரு ஊழியக்கார

ராக இருந்து, அவருக்கு பூமிக்குரிய ஒரு பிரதிநிதியாகவே ஊழியம் செய்ய வேண்டியிருந்தது. அவர் இஸ்ரவேலரை, விரோதிகளுக் கெதிராகத் தற்காக்கவும், இஸ்ரவேலரை நீதியில் வழி நடத்தவும், தேசத்தை ஒருமைப்பாட்டுடன் கட்டியெழுப்பவும் வேண்டியதாய் இருந்தது.

இராஜ்யம் என்பது அரசியல் ரீதியான, ராஜரீகம் செய்யும் ஒரு அரசரையும், ஆட்சி செய்யும் பகுதி ஒன்றையும், அதிகாரம் செலுத்தப் பட குடிமக்களையும், அரசர் தமது அதிகாரத்தைச் செலுத்துவதற்குச் சட்டங்களையும் கொண்டிருக்க வேண்டியதாகும். இராஜ்யங்கள் சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ இருக்கக் கூடும்; அவைகள் இயல்பான பூமி என்ற ஆளுகைப் பகுதியையோ அல்லது ஒரு நாடோடி இனத்தையோ கொண்டவையாக இருக்கக் கூடும். ஒரு அரசரின் அதிகாரமும், அந்த அரசருக்கு குடிமக்களின் கீழ்ப்படிதலுமே "இராஜ்யம்" என்ற வார்த்தையின் முக்கிய கருத்தாக இருக்கின்றன.

## இதன் தீர்க்கதரிசனப் பயன்பாடு

''இராஜ்யம்'' என்ற வார்த்தையானது வேதவசனங்களில் தீர்க்கதரிசனப் பயன்பாடு ஒன்றையும் பெற்றிருக்கின்றது. அரசியல் ரீதியான இந்தச் சொற்றொடரானது, பரிசுத்த ஆவியானவரால், உலகத்தின் கடைசி யுகமாகிய கிறிஸ்துவின் யுகத்தில் தேவன் செய்வதற்கு நோக்கமாயிருந்த ஊழியத்தை முன்னுரைக்கப் பயன்படுத்தப்பட்டது.

"இராஜ்யம்" என்பது பற்றிய பழைய ஏற்பாட்டின் முக்கியமான தீர்க்கதரிசனமொன்று தானியேல் 2ல் காணப்படுகின்றது. தானியேல், பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, "அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ... அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" (தானி. 2:44) என்று எழுதினார். தானியேலின் வெளிப்படுத்துதலானது, தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட இராஜ்யத்தைக் குறித்த முக்கியமான சத்தியங்களைப் போதித்தது. முதலாவதாக, அது பரலோகத்தின் தேவனால் ஏற்படுத்தப்படும் ஒரு விசேஷித்த இராஜ்யமாக அல்லது இராஜாவின் அதிகாரமாக இருக்கும். இரண்டாவதாக, அது நித்தியமான அல்லது முடிவில்லாத இராஜ்யமாக இருக்கும். மூன்றாவதாக, அது

வல்லமையிலும், நீடித்து நிற்கும் தன்மையிலும், உலகத்தின் எல்லா இராஜ்யங்களுக்கும் மேலானதாக இருக்கும்.

மேலும், வரப்போகிற தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய தீர்க்கதரிசனமே யோவான் ஸ்நானனுடைய பிரசங்கத்தின் மையக் கருத்தாக இருந்தது (மத். 3:1, 2), இதுவே இயேசுவின் பிரசங்கம் மற்றும் போதனையின் மையக்கருத்தாகவும் இருந்தது (மத். 4:17). கிறிஸ்துவினால் பேசப்பட்ட சுவிசேஷம் இராஜ்யத்தின் சுவிசேஷ மாகவே இருந்தது (மத். 9:35). இயேசுவால் அனுப்பப்பட்ட பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும், எழுபது சீஷர்களும் (லூக். 10:1-20) பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கின்றது (மத். 10:7; லூக். 10:9) என்றே அறிவிக்க வேண்டியிருந்தது. உவமைகளில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்பட்டவைகள் இராஜ்யத்தைப் பற்றிய சத்தியங்களையே விரித்துரைத்தன. இயேசு தமது சீஷர்களுக்கு, இராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்கும்படி போதித்தார் (மத். 6:10).

யோவானும், இயேசுவும் இராஜ்யத்தைப் பற்றி எவ்வளவு அடிக்கடி போதித்தார்கள் என்பதன் அடிப்படையில் அநேக உண்மைகள் கற்றுக் கொள்ளப்படலாம்: முதலாவது, தேவனுடைய திட்டத்தில், வரப்போகிற இராஜ்யமானது மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இரண்டாவது, வரப்போகிற இராஜ்யம் அருகில் இருந்து, "துவங்கவிருந்தது" அல்லது "சமீபமாயிருந்தது." மூன்றாவது, வரப்போகிற இராஜ்யமானது தானியேல் தீர்க்கதரி சனத்தின் தெளிவான நிறைவேற்றமாயிருந்தது. நான்காவது, இராஜ்யத் தின் வருகையானது மனிதனுடைய செயலாயிராமல், தேவனுடைய செயலாயிருந்தது. ஐந்தாவது, அந்த இராஜ்யம் வந்தபோது, தேவனு டைய நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற மக்களே அதில் பிரவேசிக்கக் கூடியதாய் இருந்தது (யோவா. 3:5).

அப். 2ல் இருந்து, இராஜ்யமானது உண்மையில் இருக்கும் ஒன்றாகவே பேசப்படுகின்றது. நிக்கொதேமுவிடம் இயேசு, "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 3:5) என்று கூறியிருந்தார். ஆனால் சமாரியாவில், பிலிப்பு கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்ததை லூக்கா, "தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும்

ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப். 8:12) என்று எழுதினார். இராஜ்யம் இல்லாதிருந்தால், பிலிப்பு இந்தச் செய்தியைப் பிரசங்கித்திருக்க முடியாதே.

"இராஜ்யம்'' என்ற இந்த வார்த்தையானது, இந்த உலகத்தில் தேவனுடைய சித்தத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்த மக்களை தேவன் ஆவிக்குரிய ஒரு இராஜ்யத்தில் ஆளுவதைக் குறிப்பதே இதன் தீர்க்கதரிசனப் பயன்பாடு ஆகும். இது ஒரு ஆளுகையையும் ஒரு ஆளும் பகுதியையும்-ஆளுகை என்பது ஜீவன் மேல் தேவனுடைய ஆளுகையையும், ஆளும் பகுதி என்பது தேவனுடைய ஆளுகை வெளிப்படையாக இருக்கும் ஆவிக்குரிய கோளத்தையும்-குறிக் கின்றது. கிறிஸ்துவின் அரச அதிகாரம் "சபை" என்ற வார்த்தையிலும் உள்ளடங்கியிருக்கின்றது: சுவிசேஷத்தைப் பெற்றுக் கொண்டு கிறிஸ்துவின் சித்தத்திற்குத் தம்மை ஒப்புக் கொடுப்பவர் எவரும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் கொண்டு வரப் படுகிறார்; அவர் சபையின் தலைவராகிய கிறிஸ்து இயேசுவுக்குத் தம்மை ஒப்புக் கொடுத்து வாழ்கின்றார்; அவர் தேவனுடைய பூமிக்குரிய இராஜ்யத் தில் வாழுகின்றார். மக்களின் இருதயங்களில் கிறிஸ்துவின் அரச அதிகாரமானது சபையை உருவாக்குகின்றது. இவ்விதமாக, "தேவனு டைய இராஜ்யம்'' மற்றும் "கிறிஸ்துவின் சபை'' ஆகியவை ஒரே அர்த்தம் தரும் விளக்கங்களாக இருக்கின்றன, இதை இயேசு மத். 16:18, 19ல் வெளிப்படுத்தினார்.

## இந்நாட்களில் இதன் பயன்பாடு

''இராஜ்யம்'' என்ற வார்த்தையின் அரசியல் பின்னணி, தீர்க்கதரிசனப் பயன்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டில் அதன் உண்மை நிலை ஆகியவைகள் இன்றைய நாளில் இந்த வார்த்தையின் நடைமுறைப் பயன்பாட்டை வேண்டி நிற்கின்றன.

முதலாவது, இது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். தானியேல் கூறிய இராஜ்யம் வந்திருக்கின்றது. அரச அதிகாரம் என்ற வகையில், ஆவிக்குரிய ஆளுகைப் பகுதியை உடையதான தேவனுடைய விசேஷித்த செயல்பாடானது இந்த உலகில் இப்போது இருக்கின்றது. தேவனுடைய சித்தத்திற்குத் தலை வணங்கியவர்கள் யாவரும் இந்த அரச அதிகாரத்தின் கீழ் வந்திருக்கின்றார்கள். வரப்போகின்ற தாயிருந்த தேவனுடைய இராஜ்யம் பற்றிய தீர்க்கதரிசனமானது

நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது, "இராஜ்யம்" என்ற வார்த்தையை நாம் இன்றைய நாளில் உண்மையான நிலைப்பாட்டின் வகையில் பயன்படுத்த வேண்டும். தேவனுடைய இராஜ்யமானது இனி வரப்போவதாயிருக் கிறதல்ல. கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தோடு கிறிஸ்துவின் சபைக்குள் வருகின்ற எல்லாரையும் அவர் இப்பொழுது ஆட்சி செய்கின்றார். ஒரு விதத்தில், "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்பது நம்முடைய ஜெபமாய் இராமல், "நீர் எனது வாழ்க்கையை முற்றிலுமாக ஆளும்படி யாகவும், நான் உமது அரசில் இருக்கும்படியாகவும் உமது சித்தத்திற்கு நான் முழுமையாக என்னை ஒப்படைக்க உதவி செய்யும்" என்பதே நமது ஜெபமாக இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, நாம் இந்த வார்த்தையை தேவனுடைய பரலோக அதிகாரத்தின் பூமிக்குரிய ஒரு பாகமாய்க் குறிப்பிடுவதில் பயன்படுத்த வேண்டும். தேவனால் விசேஷமாய்த் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களாகிய சபையார் அவரது இராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியாக இருக்கின்றார்கள். இயேசுவும், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் சபையை வந்திருக்கின்ற தேவனுடைய இராஜ்யமாக அல்லது கிறிஸ்துவின் இராஜ்யமாகக் காண்பித்திருக்கின்றார்கள். ஒரு இராஜாவுக்கு ஒப்புக் கொடுத்தலானது ஒரு குடியுரிமையை அல்லது ஒரு இராஜ்யத்தை உருவாக்குகின்றது. கீழ்ப்படிந்த விசுவாசிகளால் ஆன இந்த சமுதாயத்தை இயேசு தமது சபை என்று அழைத்தார் (மத். 16:18, 19).

நான்காவது, நாம் இந்த வார்த்தையை ஒரு ஆவிக்குரிய ஆளுகையின் சந்தர்ப்பப் பொருளில் காண வேண்டும். விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஆளுகையின் கீழ் இருக்கின்றார்கள், மற்றும் இவர்கள் வரப்போகின்ற நித்தியத்தில் தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் களுடன் முழுமையான மற்றும் நெருங்கிய ஒரு உறவில் பிரவேசிப் பதை எதிர்பார்க்கின்றார்கள். சபை இப்பொழுது ஒரு இராஜ்யமாக இருக்கின்றது, ஆனாலும் இதன் உறுப்பினர்கள் வரப்போகின்ற ஒரு நித்திய இராஜ்யத்தை எதிர் நோக்கியிருக்கின்றார்கள். "இராஜ்யம்" என்ற வார்த்தை ஒரு எதிர்கால அர்த்தத்தையும் கொண்டிருக்கின்றது. கிறிஸ்து, ''என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை, ..." (மத். 7:21) என்று கூறினார். பவுல், ''கர்த்தர் எல்லாத் தீமையினின்றும்

என்னை இரட்சித்து, தம்முடைய பரம இராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதா காலங்களிலும் மகிமை உண்டா வதாக ஆமென்" (2 தீமோ. 4:18) என்று எழுதினார். பவுல் தேவனு டைய இராஜ்யத்திலே இருந்தார், ஆனால் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பதை அவர் எதிர் நோக்கியிருந்தார். அவர் இராஜ்யம் என்பதை, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் தீர்க்கதரிசனங் களுடைய நிறைவேற்றமாக, அது கிறிஸ்து கட்டிய சபையில் இன்றைய நாட்களில் உண்மை நிலைப்பாடாகவும், நித்தியத்திற்கான ஒரு வாக்குத்தத்தமாகவும் காண்பிக்கப்பட்டுள்ளதைப் பார்த்தார்.

புதிய ஏற்பாட்டை ஒருவர் படிக்கையில், "பரலோக இராஜ்யம்" அல்லது "தேவனுடைய இராஜ்யம்" என்று வரும் இடங்களில் அல்லது இராஜ்யத்தைக் குறிக்கும் வேறொரு சொற்றொடர் வரும் இடங் களில், ''இராஜ்யம்'' என்ற வார்த்தையின் பயன்பாடு குறைந்து கொண்டே வருவதை அவர் கவனிக்கின்றார். இராஜ்யம் பற்றிய குறிப்புகள் மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் நாற்பத்தி ஒன்பது முறைகளும், மாற்கு சுவிசேஷத்தில் பதினைந்து முறைகளும், லூக்கா சுவிசேஷத்தில் முப்பத்தி ஒன்பது முறைகளும், யோவான் சுவிசேஷத் தில் ஐந்து முறைகளும், அப். நடபடிகளில் எட்டு முறைகளும், பவுலின் நிருபங்களில் பதினான்கு முறைகளும், பொது நிருபங்களில் இரண்டு முறைகளும், எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் இரண்டு முறைகளும், வெளிப்படுத்தின விசேஷத்தில் மூன்று முறைகளும் இருக்கின்றன. ஆகவே, ''இராஜ்யம்'' என்ற வார்த்தையின் பயன்பாடு புதிய ஏற்பாட்டில் தொடர்ந்து ஆனால் இறங்குமுகமாய் இருக்கின்றது. (பிற்சேர்க்கை 4ஐப் பார்க்கவும்).

புதிய ஏற்பாட்டில் மத்தேயு ஒருவர் மட்டுமே ''பரலோக இராஜ்யம்'' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தும் எழுத் தாளராவார். மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் "தேவனு டைய இராஜ்யம்" என்ற சொற்றொடரையே பயன்படுத்துகின்றனர். அப். நடபடிகள் புத்தகத்திற்கு வருகையில் ''இராஜ்யம்'' என்ற வார்த்தையின் பயன்பாடு குறைந்து கொண்டே வருவதையும், "சபை" என்ற வார்த்தையின் பயன்பாடு அதிகரித்துக் கொண்டே வருவதையும் பார்க்கலாம். இது, "இராஜ்யம்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "சபை" என்ற வார்த்தையைப் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தியதுபோல் இருக்கின்றது.

## “சபை” என்ற வார்த்தை

*‘‘சபை’’ என்ற வார்த்தைக்குப் புதிய ஏற்பாட்டின் முழுச் செய்தியுடன் உள்ள முக்கியத் தொடர்பின் காரணமாக அவ்வார்த்தை யுடன் மிகவும் விசேஷித்த ஒரு முக்கியக் கருத்து இணைந்திருக்கின்றது. ‘‘சபை’’ என்று தமிழிலும், “Church” என்று ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் 114 முறைகள் வருகின்றது. புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள விதத்தைப் புரிந்து கொள்ளாமல், ஒருவர் இந்த உலகத்தின் இரட்சிப்பிற்கான கிறிஸ்துவின் வழியைப் புரிந்து கொள்ளலாம் என்று நம்ப முடியாது என்று கூறுவது அநேகமாக மிகவும் சரியானதேயாகும்.*

### இதன் உலகப் பிரகாரமான பயன்பாடு

*முதலாவதாக, இவ்வார்த்தையானது மார்க்க ரீதியான குறிப்பிட்ட அர்த்தம் எதுவுமின்றி, பொதுவான, அன்றாடம் பயன்படுத்துகின்ற வார்த்தையாக இருக்கின்றது.*

*இப்படிப்பட்ட பயன்பாட்டின் எடுத்துக்காட்டொன்று எபேசுவில் நடந்த கலகத்தின் தொடர்பாக அப். 19ல் மேம்போக்காகக் காணப்படுகின்றது. கிறிஸ்தவத்திற்கு அங்கு ஒரு தொந்தரவு உண்டாயிற்று. மக்கள் அருகில் இருந்த ஒரு அரங்க சாலைக்குள் பாய்ந்தோடினார்கள், அங்கு குழப்பம் நிறைந்திருந்தது. அவர்கள் கூடியிருந்தது பற்றி லூக்கா எழுத்தாளர், ‘‘கூட்டத்தில் அமளி யுண்டாகி, சிலர் இப்படியும் சிலர் அப்படியுமாகப் பேசினார்கள்; தாங்கள் கூடி வந்த காரணம் இன்னதென்று அநேகருக்குத் தெரியாதிருந்தது” (அப். 19:32) என்று கூறினார்.*

*இந்த வசனத்தில் கூட்டம் என்ற வார்த்தைக்கு ekklesia என்ற வார்த்தை லூக்காவினால் பயன்படுத்தப்பட்டது. இந்த வார்த்தை தமிழில் ‘‘சபை’’ என்றும் ஆங்கிலத்தில் “Church” என்றும் மொழி பெயர்க்கக் கூடியதாய் இருக்கின்றது. இறுதியாகப் பட்டணத்துச் சம்பிரதியானவன் பின்வருமாறு பேசினான்:*

> *நீங்கள் வேறே யாதொரு காரியத்தைக் குறித்து விசாரிக்க வேண்டியதானால், அது நியாய சங்கத்திலே தீர்க்கப்படும். இன்றைக்கு உண்டான கலகத்தைக் குறித்து நாம் உத்தரவு சொல்லுகிறதற்கு ஏதுவில்லாதபடியால், இந்தக்*

*கலகத்தைக் குறித்து நாங்கள் விசாரிக்கப்படும்போது, குற்றவாளிகளாகிறதற்கு ஏதுவாயிருப்போம் என்று சொல்லி (அப். 19:39, 40).*

*இதன் பின் லூக்கா கூடுதலாக, ''பின்பு கூட்டத்தை அனுப்பி விட்டான்" (அப். 19:41) என்றார்.*

*ஒரு நகரக் கூட்டத்தைப் பற்றிய இந்த விபரத்தில் லூக்கா, ekklesia என்ற கிரேக்க வார்த்தையை மூன்று முறை பயன்படுத்தினார் (அப். 19:32, 39, 41). இதை ஒரு சாதாரணக் கூட்டம் என்ற அர்த்தத்திலேயே அவர் பயன்படுத்தினார், ஏனென்றால் வசனம் 32 மற்றும் 41ல் அவர் ekklesia என்று அழைக்கும் இந்தக் குழு வசனம் 30ல் ஒரு கும்பல் என்பதாகவே சித்தரிக்கப்பட்டது. அரங்க சாலையில் இருந்த கூட்டத்தார் அல்லது ekklesia என்ற சபையார், கூடிவரும்படியாக அழைக்கப்பட்டவர்கள் அல்ல; குழப்பம் மற்றும் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக அது தற்செயலாக ஏற்பட்டதாகும். வசனம் 39ல் சட்ட ரீதியான விஷயங்களை தீர்த்து வைக்கும் நியாய சங்கத்தையும் லூக்கா ekklesia (சபை) என்றே அழைத்தார்.*

*Ekklesia என்ற வார்த்தையை லூக்கா பயன்படுத்தியுள்ள விதத்தின் வெளிச்சத்தில், அந்த வார்த்தையின் உலகப் பிரகாரமான பயன் பாடானது எந்த வகையான ஒரு கூட்டத்தையும் குறிக்கின்றது என்று எண்ணுவதே சிறந்ததாகும். சிலவேளைகளில் ஒரு கூட்டமானது கூட்டப்படுகின்றது அல்லது கூடும்படி அழைக்கப்படுகின்றது, மற்றும் சிலவேளைகளில் தற்செயலாக ஒரு கூட்டம் கூடுகின்றது. இப்படிப் பட்ட கூட்டம் ஒவ்வொன்றையும் லூக்கா ekklesia என்ற அழைத்தார்.*

*இன்றைய நாட்களில் மொழி வல்லுநர்கள் சிலர், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட நாட்களில் ekklesia என்ற வார்த்தையின் உலகப் பிரகாரமான பயன்பாடானது, "அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்" என்ற அர்த்தத்தைக் காட்டிலும் ''தற்செயலான கூட்டம்'' என்ற அர்த்தத்தையே அதிகமாய்த் தந்தததாக நம்புகின்றார்கள். அப். 19ல் லூக்காவினால் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்ட விதமானது அவர்களின் முடிவுகளை உறுதி செய்கின்றது.*

*Ekklesia என்ற வார் த்தையை லூக்கா பயன்படுத்திய விதமானது, நமது கர்த்தர் அதை மார்க்க ரீதியான வகையில் பயன்படுத்தும் முன்னர் உலகத்தில் அது எப்படி ஒரு உலகப் பிரகாரமான வார்த்தையாகப் பயன்படுத்தப்பட்டது என்ற ஆழ்ந்த அறிவை*

*நமக்குத் தருகின்றது. இந்த வார்த்தையின் இப்பின்னணியானது, நமது கர்த்தர் இந்த ekklesia என்ற வார்த்தையைப் பயன்படுத்திய விதத்தைப் பற்றிய புரிந்து கொள்ளுதலை நல்ல முறையில் நாம் கட்டியெழுப்பிக் கொள்ள ஒரு அடிப்படையாக நமக்கு உதவும்.*

## இதன் மார்க்க ரீதியான பயன்பாடு

*Ekklesia என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மார்க்க ரீதியான பயன்பாடொன்றையும் பெற்றிருந்தது.*

*யூதப் பின்னணியில் இருந்து, கிறிஸ்தவம் என்ற கருத்தானது தேவனுடைய மக்கள் முன் நிற்கும் ஒரு கூட்டமாகும் என்பது பழைய ஏற்பாட்டில் தெளிவாக இருக்கின்றது. பழைய ஏற்பாட்டு வேதவசனங் களின் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் எபிரெய மொழியில் qahal என்ற வார்த்தையானது கிரேக்க மொழியில் ekklesia என்ற வார்த்தையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, விசேஷமாக இஸ்ரவேல் "சபையார்" மார்க்க நோக்கங்களுக்காகக் கர்த்தருக்கு முன்பாகக் கூடும்போது அவர்களைக் குறிப்பதற்கு இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டது (உபா 18:16; 31:30; 1 இரா. 8:65; அப். 7:38).*

*"Synagogue" என்ற வார்த்தையும் கூட முதலாவது, ஒரு குறிப் பிட்ட நோக்கத்திற்காக கூடிவரும் மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டது. பின்னாளில், இவ்வார்த்தையானது ஆராதனைக்காக ஒன்றுகூடிய கிறிஸ்தவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. யாக்கோபு தனது புத்தகத்தை வாசிக்கும் யூத கிறிஸ்தவர்களை மனதில் கொண்டு, sunagoge மற்றும் ekklesia ஆகிய இரண்டு வார்த்தைகளையும் பயன்படுத்தினார் என்பது உறுதியாய்த் தெரிகின்றது. அவர் sunagoge என்ற வார்த்தையை ஆராதிக்க ஒன்றுகூடும் கிறிஸ்தவர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தினார் (யாக். 2:2), மற்றும் அவர் ekklesia என்ற வார்த்தையை ஒரு குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதியில் கூடிவரும் சபையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தினார் (யாக். 5:14).*

*இவ்விதமாக, நமது கர்த்தர், தமது இரட்சிப்பின் மூலமாக தேவனு டைய தனிச் சிறப்புள்ளவர்களாகும் மக்களைக் குறிப்பதற்கு ஒரு வார்த்தையைத் தேர்ந்தெடுத்தார், உலகப் பிரகாரமாக "கூட்டம்" என்று பொருள்படுகின்ற, ஆனால் பழைய ஏற்பாட்டுப் பயன் பாட்டின்படி "தேவனுடைய மக்களின் கூட்டம்" என்று பொருள் படுகின்ற "சபை" (மத். 16:18) என்ற வார்த்தையைத் தேர்ந்தெடுத்தார்.*

நமது கர்த்தர் உலகப் பிரகாரமான ஒரு வார்த்தையை எடுத்து, அதற்கு மார்க்க ரீதியான விசேஷித்த அர்த்தம் ஒன்றைக் கொடுத்தார். இந்த வார்த்தையைத் தேர்ந்தெடுத்ததில் அவர் இதன் உலகப் பிரகாரமான மற்றும் மார்க்கரீதியான பின்னணிகளில் இருந்து கூடுதலாக தமது சொந்த அர்த்தங்களையும் சேர்த்தார். இயேசு கொடுத்தபடி, இந்த வார்த்தையானது கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு உலக முழுவதிலுமிருந்து தேவனுடைய மக்களானவர்களை (அவர்கள் கூடி வருகையிலும், மற்ற சமயங்களிலும்) குறிக்கின்றது (அப். 8:3; எபே. 1:23).

*Ekklesia* என்ற வார்த்தையின் தொடர்பாக, புதிய ஏற்பாட்டில் ''வெளியே அழைக்கப்பட்டவர்கள்'' அல்லது ''பிரித்தெடுக்கப் பட்டவர்கள்'' என்ற கருத்தும் கொண்டு வரப்படுகின்றது. இந்த வார்த்தையின் பொதுவான பயன்பாட்டில் இந்தச் சிந்தனை இல்லாதிருந்தாலும், கிறிஸ்துவின் விசேஷித்த பயன்பாட்டில் இது ஒரு முக்கியமான பாகமாயிருக்கின்றது. இங்கு குறிக்கப்பட்டுள்ள மக்களின் இயல்பில் இக்கருத்தானது முன்னிருத்தப்படுகின்றது.

பெந்தெகொஸ்தே நாளன்று கூடியிருந்த மக்களிடத்தில் பேதுரு, ''வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது'' (அப். 2:39) என்று சொன்னார். தெசலோனிக்கேயருக்குப் பவுல், "மேலும், தம்முடைய ராஜ்யத்துக்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டும்" (1 தெச. 2:11) என்று கூறினார். சுவிசேஷத்தின் மூலமாகவே தேவன் அவர்களை அழைத்திருந்தார். பவுல், "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்" (2 தெச. 2:14) என்று கூறினார். இவ்விதமாக சுவிசேஷத்தின் மூலமாக தேவனிடத்தில் அழைக்கப்பட்ட மக்கள் "சபையார்" என்று அழைக்கப்பட்டனர் (1 கொரி. 1:1-3).

மேலும், கொலோசே பட்டணத்தில் இருந்த சபைக்குப் பவுல், "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டா யிருக்கிறது" (கொலோ. 1:13, 14) என்று கூறினார். பேதுரு, "நீங்களோ,

*உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக் கும்படிக்கு ...” (1 பேது. 2:9அ) என்று கூறினார். மேலும் பேதுரு, “உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்” (1 பேது. 1:15) என்றும் எழுதினார்.*

*இடம் மற்றும் காலம் என்ற வரையறை எதுவுமின்றி, கிறிஸ்துவின் யுகத்தில் தேவனுடைய மக்கள் அனைவரையும் குறிப்பிடுவதற்கு இயேசு, “சபை” என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். பெந்தெ கொஸ்தே நாளன்று நிலைநாட்டப்பட்ட உள்ளூர் கிறிஸ்துவின் சபையில் இன்றைய நாட்களில் இருக்கும் கிறிஸ்தவர்கள் எவரும் உறுப்பினராய் இல்லாமல் போனாலும் கூட, எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் இருக்கின்ற உண்மைக் கிறிஸ்தவர்கள் அனைவரும் கர்த்தர் அந்நாளில் நிலைநாட்டிய அதே சபையின் உறுப்பினர்களாகவே இருக்கின்றார்கள். இயேசு உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று, எருசலேமில் சபையானது எல்லாக் காலத்திற்குமாக நிலைநாட்டப்பட்டு விட்டது. ஆனாலும் அதற்கு ஒரே பிறந்த தேதிதான் உண்டு. மறுபடியும் மறுபடியும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் அல்லது விசுவாச விலக்கத்தின் காலங்களுக்குப் பிறகும் அது பிறக்கவில்லை.*

## இதன் நடைமுறைப் பயன்பாடு

*இயேசுவாலும், பரிசுத்த ஆவியானவராலும் “சபை” என்ற வார்த்தைக்குக் கொடுக்கப்பட்ட அர்த்தமானது, புதிய ஏற்பாட்டில் நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் எதிர்ப்பார்ப்போம். அவ்வாறே நடந்துள்ளது.*

*ஏவப்பட்ட எழுத்தாளர்கள் “சபை” என்ற வார்த்தையை நடைமுறைப் பயன்பாட்டில், நான்கு வழிகளில் பயன்படுத்தி யுள்ளனர். முதலாவது, ஒரு குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதியில் கூடிவரும் தேவனுடைய மக்களாகிய உள்ளூர் சபையைக் குறிப்பதற்கு இதைப் பயன்படுத்தியுள்ளனர். பவுல், கொரிந்துவில் உள்ள “தேவனு டைய சபைக்கும்” கிறிஸ்து இயேசுவினாலே பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்கும் என்று எழுதினார் (1 கொரி. 1:2). பிலிப்பியில் இருந்த சபையார், “பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக் குள்ளான பரிசுத்தவான்கள்” (பிலி. 1:1) என்று குறிப்பிடப்பட்டனர்.*

*தெசலோனிக்கேயில் இருந்த பரிசுத்தவான்கள், "தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக் கேயர் சபை" (1 தெச. 1:1) என்று குறிப்பிடப்பட்டனர். ஒரு குறிப் பிட்ட பகுதியில் இருந்த எல்லாக் கிறிஸ்தவர்களும் அந்த இடத்தின் "சபையார்" என்று அழைக்கப்பட்டனர். உலகளாவிய சபையின் ஒரு வெளிப்பாடாகவே கிறிஸ்தவர்களைக் கொண்ட உள்ளூர் சபை விளங்குகின்றது. ஒருவர், கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராகும் போது, அவர் வாழ்கின்ற இடத்தில் இருக்கும் கிறிஸ்தவர்களின் அமைப்பில் அவர் ஒரு உறுப்பாகின்றார்.*

*இரண்டாவது, ''சபை'' என்ற வார்த்தையை, ஏவப்பட்ட எழுத்தாளர்கள், ஒரு பரந்த பகுதியில் கூடிவரும் உள்ளூர் சபைகளைப் பற்றிப் பேசுவதற்குப் பயன்படுத்தினார்கள். லூக்கா, "அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத் தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின" (அப். 9:31) என்று எழுதினார். சில வேளைகளில் இப்பெரும் பகுதியில் உள்ள சபை, "சபைகள்" என்று பன்மைச் சொல்லில் குறிப்பிடப்பட்டன. பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில், "கலாத்தியா நாட்டி லுள்ள சபைகளுக்கு" (கலா. 1:2) என்று எழுதினார். இந்தியாவில் உள்ள சபை அல்லது இந்தியாவில் உள்ள சபைகள் என்பது ''சபை'' என்ற வார்த்தையின் வேத ரீதியான பயன்பாடாகவே இருக்கின்றது.*

*மூன்றாவதாக, "சபை" என்ற வார்த்தையைப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், சபையானது எவ்விதமாய் அமைக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்பிக்கப் பயன்படுத்தினார்கள். சபைகளில் உள்ள மக்களைப் பற்றிக் கூற அவர்கள் இந்த வார்த்தையைப் பயன்படுத்தி னார்கள். ரோமர் 16ல் பவுல் தமது வாழ்த்துதலில் "புறஜாதியாரில் உண்டான சபைகளை"க் குறிப்பிட்டார்: "கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதி யாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டிலே கூடி வருகிற சபையையும் வாழ்த்துங்கள் ..." (ரோமர் 16:3-5).*

*நான்காவது, ''சபை'' என்ற வார்த்தையை ஏவப்பட்ட இந்த எழுத்தாளர்கள், ஆராதனைக்குக் கூடிவருகின்ற ஒரு உள்ளூர்*

*சபையைக் குறிப்பிடப் பயன்படுத்தினார்கள். ஆராதனைக்குக் கூடி வராத சமயத்திலும் சபையானது இருக்கின்றது, ஆனால் "சபை" என்ற வார்த்தையானது ஒரு குறிப்பிட்ட பகுதியில் கூடிவரும் சபையைக் குறிப்பதற்கென்று விசேஷமாகப் பயன்படுத்தப்பட்டது. கொரிந் தியர்கள் ஒன்றுகூடி வருதலைப் பவுல், சபை என்று குறிப்பிட்டார் (1 கொரி. 11:18). சபைகளில் பெண்கள் பேசாதிருக்க வேண்டும் என்று அவர் கூறினார்: "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது (1 கொரி. 14:34). இவ்வசனப் பகுதியில் அவர் ஆராதிக்கக்கூடும் சபையையே குறிப்பிடுகிறார் என்பது தெளிவு.*

*சபையை ஒருவர் எந்த வழியில் குறிப்பிட்டாலும், அவர், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஒப்புக் கொடுத்து, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் கொண்டு வரப்பட்டவர்களைப் பற்றியே பேசுகின்றார். கிறிஸ்தவராகும் ஒருவர், இந்த உலகத்திலிருந்தும், இருளிலிருந்தும் வெளியே அழைக்கப்பட்டு, கிறிஸ்துவும், புதிய ஏற்பாட்டின் ஏவப்பட்ட எழுத்தாளர்களும் "சபை" என்று அழைத்த சரீரத்திற்குள் தேவனுடைய கிருபையினால் வைக்கப்படுகின்றார்கள்.*

## முடிவுரை

*தேவன் தமது மக்களைக் குறிப்பதற்குத் தேர்ந்தெடுத்த வார்த்தைக ளைப் பற்றிய இந்தச் சுருக்கமான படிப்பானது நாம் அவரது இராஜ்யமாகிய சபையில் பிரவேசிக்கும்படிக்கு நமக்கு உறுதியாகவே அறைகூவல் விடுக்கின்றன. தேவன் இந்த உலகப் பிரகாரமான வார்த்தைகளை எடுத்து, அவைகளுக்குக் கூடுதலான அர்த்தங்கள் கொடுத்து, அவரது கிருபையின் சுவிசேஷத்தின் மூலமாக இரட்சிப் புக்கு அழைக்கப்பட்ட மக்களுக்கு அவைகளை நடைமுறைப் படுத்தினார். இவ்விதமாக, இவ்வார்த்தைகள் தேவனுடைய அதிகாரத் திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்து, கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்களைக் குறிக்கின்றன. பிதாக்களின் காலம் மற்றும் மோசேயின் காலம் ஆகிய நீண்ட வருடங்களில் தேவன் தமது விசேஷித்த மக்களுக்காகத் திட்டமிட்டார். தமது செய்தியாளர்களை முன்னுரைக்கும்படி அவர் ஏவிய எல்லாவற்றையும் அவர் நிறைவேற்றி யிருக்கின்றார். இப்பொழுது அவருடைய இராஜ்யத்தில் பிரவேசித்து,*

சபையில் சேர்க்கப்படுவது என்பது உங்களைப் பொறுத்ததேயாகும்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 315 ம் பக்கங்களில்)*

1. ஒரு அரசர் மற்றும் இராஜ்யம் என்ற முறையில் இஸ்ரவேலருடனான தேவனின் உறவைப் பற்றி விவாதித்து அறியவும்.
2. இஸ்ரவேலரின் முதல் அரசரான சவுல், தேவனுடைய இராஜ்யமாகிய இஸ்ரவேலின்மேல் கொண்டிருந்த பொறுப்புக்கள் என்ன?
3. வரப்போகிறதாயிருந்த இராஜ்யத்தைப் பற்றிய தானியேலின் தீர்க்கதரிசனத்திலிருந்து என்னென்ன பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும்? (தானி. 2:44ஐக் காணவும்).
4. புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" என்ற வார்த்தையின் பயன்பாடு இறங்கு முகமாக இருப்பதைக் கவனியுங்கள். இது எதனை அர்த்தப்படுத்துகிறது?
5. இன்றைய நாட்களில் தேவனுடைய இராஜ்யத்தில் இருக்கும் வேளையிலேயே, ஒருவர் எவ்விதம் நித்திய இராஜ்யத்தை எதிர்நோக்கியிருக்க முடியும் என்பதை விளக்குக (2 தீமோ. 4:18ஐக் காணவும்).
6. "சபை" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் எத்தனை முறை வருகின்றது? இந்த வார்த்தையைப் பற்றிய குறிப்பிடத்தக்க விளக்கமாகத் தரப்படுவது என்ன?
7. புதிய ஏற்பாட்டில் பிரதிபலித்துள்ளபடி, "சபை" என்ற வார்த்தையின் உலகப் பிரகாரமான எளிய பயன்பாடு பற்றி விளக்கம் தரவும். அவ்விதமாய் பயன்பட்டுள்ள வசனம் ஒன்றையும் குறிப்பிடவும்.
8. "சபை" என்ற வார்த்தையானது உலகப் பிரகாரமான வகையில் எப்பொழுதுமே மார்க்க ரீதியான ஒரு கூட்டத்தைக் குறிப்பிடு கின்றதா? அது எப்பொழுதுமே, ஒரு விசேஷ நோக்கத்திற்காக ஒன்றுகூடும்படி "அழைக்கப்பட்டவர்களின்" கூட்டத்தைக் குறிப்பிடுகின்றதா?

## வார்த்தை உதவிகள்

***கிறிஸ்துவின் மணவாட்டி*** - *சபை. சபைக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள உறவானது, மனைவியிடம் கணவனுக்குள்ள உறவோடு ஒப்பிடப்படுகின்றது. (எபே. 5:22-29க் காணவும்).*

***உவமைகள்*** - *ஆவிக்குரிய சத்தியங்களை விளக்கப்படுத்துவதற்கு, இயேசு அடிக்கடி அன்றாட வாழ்க்கையிலிருந்து கதைகளைப் பயன்படுத்தினார் (மத். 13:34).*

***பிதாக்களின் யுகம்*** - *வேதாகம வரலாற்றில் தெளிவான மூன்று யுகங்களில் ஒன்று. தேவன், குடும்பத் தலைவர்களுடன் நேரடியாகப் பேசிய யுகம் பிதாக்களின் யுகம் ஆகும். இதற்கு அடுத்து, இஸ்ரவேலின் குமாரர்கள், மோசேக்குத் தரப்பட்ட (பத்துக் கட்டளைகள் உள்ளிட்ட) பிரமாணத்தைப் பின்பற்றியபோது இது மோசேயின் யுகம் என்னப் பட்டது. இயேசுவின் சிலுவை மரணத்தின்போது இந்த யுகம் முடிவடைந்தது. இறுதியான யுகம் கிறிஸ்துவின் யுகம் ஆகும். இந்த யுகத்தில், இரட்சிக்கப்பட்ட அனைவரும் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள், மற்றும் புதிய ஏற்பாடு மட்டுமே உபதேசத் திற்கும் ஆராதனைக்கும் ஒரே அளவீடாக இருக்கின்றது. இயேசுவின் இரண்டாம் வருகை மட்டும் இந்த யுகம் நீடித்திருக்கும்.*

***தீர்க்கதரிசனம்*** - *தீர்க்கதரிசி கூறிய ஏவப்பட்ட வசனங்கள், தேவனுடைய சித்தமாகக் கண்ணோக்கப்பட்டன; சில வேளைகளில், தெய்வீக ஏவுதலினால் எதிர்காலத்தைப் பற்றி முன்னுரைக்கப்பட்டது.*

***சாமுவேல்*** - *பழைய ஏற்பாட்டின் ஒரு மாபெரும் தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் நியாயாதிபதி.*

***அரசர்*** - *மாபெரும் வல்லமையுள்ள ஒரு அரசர் அல்லது மற்ற அதிகாரி. 1தீமோ. 6:14, 15ல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து "நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்" என்று கூறப்படுகின்றார்.*

## புதிய ஏற்பாட்டு சபை

| தோற்றுவித்தவர்: கிறிஸ்து *மத். 16:18* | எங்கே: எருசலேம் *ஏசா. 2:3; அப். 2:5, 47* | எப்பொழுது: கி.பி. *33 அப். 2* | தலைவர்: கிறிஸ்து *எபே. 1:23* |
|---|---|---|---|

| | |
|---|---|
| **அமைப்பு முறை** *பிலி. 1:1* | *மூப்பர்கள்: தீத்து 1:5; 1 பேது. 5:1-3; அப். 20:28; 1 தீமோ. 3:1-7; உதவிக்காரர்கள்: அப். 6:1-6; 1 தீமோ. 3:8-13; உறுப்பினர்கள்: அப். 2:41-47; கொலோ. 1:13; 1 கொரி. 1:2.* |
| **சபைக்குப் பெயர்கள்** *எபே. 3:14* | *சபை: கொலோ. 1:18, 24; கிறிஸ்துவின் சரீரம்: எபே. 1:22, 23; இராஜ்யம்: அப். 8:12; கிறிஸ்துவின் சபையார்: ரோமர் 16:16; தேவனுடைய சபை: 1 கொரி. 1:2; அப். 20:28; தேவனுடைய வீட்டார்: எபே. 2:19; 1 தீமோ. 3:15; கர்த்தருடைய சீஷர்கள்: அப். 9:1; தேவனுடைய ஆலயம்: 1 கொரி. 3:16; முதற்பேறானவர்களின் சபை: எபி. 12:23* |
| **கிறிஸ்தவர்களுக்குப் பெயர்கள்** *எபே. 3:14* | *சீஷர்கள்: அப். 11:26; பரிசுத்ததவான்கள்: 1 கொரி. 1:2; பிலி. 1:1; தேவனுடைய பிள்ளைகள்: கலா. 3:26; 1 யோவா. 2:1; சகோதரர்கள்: லூக். 8:21; கலா. 6:1; கிறிஸ்தவர்கள்: அப். 11:26; 26:28; 1 பேது. 4:16* |
| **சமயக்கோட்பாடு** | *இயேசு கிறிஸ்து: மத். 16:16-18; அப். 8:37* |
| **விசுவாச சட்டமும் நடைமுறையும்: தேவனுடைய வசனம்** | *சகல அதிகாரமும்: மத். 28:18-20; ரோமர் 1:16; எபி. 4:12; சபை அரசாங்கம்: 2 தீமோ. 3:16, 17; 2 பேது. 1:3; இராஜ்யத்தின் விதை: மத். 13:3; லூக். 8:11; ஆவியின் பட்டயம்: எபே. 6:17* |
| **ஆராதனை** | *பாடுதல்: கொலோ. 3:16; ஜெபம்: 1 தெச. 5:17; போதித்தல்: அப். 20:7; கர்த்தருடைய பந்தி: அப். 20:7; 1 கொரி. 11:23; காணிக்கை கொடுத்தல்: 1 கொரி. 16:1, 2* |
| **ஊழியம்** | *ஆத்துமாக்களை இரட்சித்தல்: மத். 28:18-20; யோவா. 6:45; எபே. 3:10; 1 தீமோ.4:16* |
| **எச்சரிக்கை** | *சத்தியத்தில் நிலைத்தல்: கலா. 1:6-8; மத். 15:9, 13; 2 கொரி. 11:3; வெளி. 22:18, 19; 2 யோவா. 9* |